## 4.1 2006–07 – புதிய மாநில திட்டம் – அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – சிறப்பு அம்சங்கள்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மாஅதி2) துறை

அரசாணை (நிலை) எண் 115 நாள்: 11.9.2006

படிக்க:

ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித்துறை இயக்குநரின் கடிதம் 48049 /2006/எஸ்.எஸ்–3, நாள் 29.6.2006.

**ஆணை**

பதின்மூன்றாவது சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் ஊரகப் பகுதிகளில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில், அரசு கூடுதல் கவனம் செலுத்தும் என்றும், கிராமங்களில் உள்ள முக்கிய தெருக்கள் படிப்படியாகக் கான்கிரீட் தளங்களாக மாற்றப்படும் என்றும், ஐநூறு அல்லது ஐநூறுக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஊரகப் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும், கிராமங்களில் மக்கள் பொதுவாகக் கூடும் மையப்பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

2. மேலே படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் தற்போது நடைமுறையில் உள்ள மாநில அரசால் செயல்படுத்தப்படும் சில திட்டங்களுக்கு உரிய பயன்பாடு இல்லாமல் இருப்பதாலும், இந்த அறிவிப்புகளை மத்திய அரசு திட்டங்களின் மூலம் நிறைவேற்ற முடியாத காரணத்தாலும், மாநில அரசின் புதிய திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தப்பட வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய திட்டத்தின் சிறப்பு அம்சங்களை அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்து மாநில அரசால் ஏற்கனவே செயற்படுத்தப்படும் சில திட்டங்களுக்கு மாற்றுத் திட்டமாக ‘‘அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்’’ (All Villages Anna Renaissance Scheme) என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தி செயற்படுத்தலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே அதனை பின்வருமாறு செயற்படுத்த ஆணையிடுகிறது.

### 4. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்துவதற்கான காரணங்கள்

i) அண்ணா மறுமலர்ச்சி திட்டம், ஒரு சட்டமன்ற தொகுதியில் ஒரு ஆண்டுக்கு ஒரு கிராமத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. ‘நமது கிராமம்’ திட்டத்தில் நிதி ஆதாரங்கள் அனைத்தும் மிக மெல்லிய அளவில் பரவலாக்கப்பட்டது. மேலும், வறுமை ஒழிப்பு திட்டம் மற்றும் ஊரக குடியிருப்புத் திட்டம் ஆகியவை இத்திட்டங்களில் மேற்கூறிய உள்ளீடான குறைபாடுகள் காரணமாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட முடியவில்லை

ii) மாநில அரசு நிறைவேற்றும் மத்திய அரசின் திட்டங்களான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், தேசீய ஊரக வேலை உறுதித் திட்டம், பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் முழு சுகாதார இயக்கம் ஆகியவை எதிர்பாரா நிலையில் குறுகிய வாய்ப்பாகவே அமைந்துள்ளது. செய்யவேண்டுவன, செய்ய கூடாதவை என அறுதியிடப்பட்ட மிக கடினமான மத்திய அரசின் வழிகாட்டும் நெறிமுறைகள் உள்ளூர் பகுதிகளின் தேவைக்கேற்ற நெகிழ்வு தன்மை அற்றதாக உள்ளது. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் ஊரக பகுதிகளில் வீட்டு வசதி அளிக்கவும், பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம், சுய வேலை வாய்ப்பை உருவாக்கவும், சம்பூர்ண கிராம வேலை வாய்ப்பு திட்டம், வேலை வாய்ப்பை உருவாக்கவும் செயல்படுத்தப்படுகின்றன. மேலும் சுகாதாரத்தின் ஒரு சில பகுதிகளை மட்டுமே உள்ளடக்கியது முழு சுகாதார இயக்கம் ஆகும். இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் ஆண்டொன்றுக்கு சராசரியாக 3லிருந்து 4 வீடுகள் கட்டி கொடுக்கப்படுகின்றன. சம்பூர்ண கிராம வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் மிகக் குறைவான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் 6 மாவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. மேலும், சம்பூர்ண கிராம வேலை வாய்ப்பு திட்டம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஆகிய இரண்டும் வேலை வாய்ப்பை உருவாக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன.

iii) ஊரக பகுதிகளில் சமுதாய சொத்துக்களை உருவாக்கவும், பராமரிக்கவும், அவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குமான தேவைகள் அதிகமாகவே உள்ளன. 1994ம் ஆண்டு தமிழ்நாடு

## 4. AGAMT

ஊராட்சிகள் சட்டம், கிராம ஊராட்சிக்கென குறிப்பிட்ட கடமைகளையும் பொறுப்புகளையும் நிர்ணயம் செய்துள்ளது. அதன்படி ஊராட்சிகளால் நிறைவேற்றப்பட வேண்டிய குறிப்பிட்ட பொருட்களை நடைமுறையில் உள்ள திட்டங்கள் மூலம் நிறைவேற்ற முடிவதில்லை. மேலும், பெரும்பாலான உள்ளாட்சி நிறுவனங்கள் அவற்றின் தேவைகளை நிறைவு செய்ய போதிய சொந்த நிதி ஆதாரங்கள் இல்லாததால் பல்வேறு திட்ட நிதி ஒதுக்கீடுகளை எதிர்நோக்கியே உள்ளன. தற்போது உள்ள திட்டங்களை செயல்படுத்துவதற்கு அவற்றின் வழிகாட்டி நெறிமுறைகள் எளிமையானதாக இருக்கவும், உள்ளாட்சி நிறுவனங்கள் தங்களின் விருப்ப பணிகளை எடுத்துச் செய்யும் வகையிலும், கிராம வளர்ச்சிக்கு மிக அத்தியாவசியமாக தேவைப்படும் மத்திய அரசு திட்டங்களின் கீழ் எடுத்துச் செய்ய இயலாத அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதாக உள்ள புதிய திட்டமே ''அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'' ஆகும்.

### 5. நிதி ஒதுக்கீடு

நமது கிராமம் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.175 கோடி, வறுமை ஒழிப்பு திட்டத்திற்கு (ultra poor) ஒதுக்கப்பட்ட ரூ.20 கோடி, ஊரக குடியிருப்பு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.50 கோடி மற்றும் தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.75 கோடி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் தொகையில் உள்ள சமன்பாடு நிதி மற்றும் ஊக்கத் தொகை நிதிகளிலிருந்து ரூ.90 கோடி தொகையினையும் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும் நடப்பு 2006–2007 நிதி ஆண்டில் கூடுதலாக ரூ.90 கோடி ஒதுக்கீடு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007–ல் சேர்க்கப்படும். இது தொடர்பாக உரிய கருத்துருக்களை அரசு நிதி (ஊ.வ) துறைக்கு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007–க்கான கருத்துருக்கள் அனுப்பும்பொழுது சேர்த்து அனுப்ப தக்க நடவடிக்கை எடுக்குமாறு ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேற்குறிப்பிட்ட மொத்தம் ரூ.500 கோடி நிதியை '' அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து நடப்பு ஆண்டில் பயன்படுத்த அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம்கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:

''4515.00 ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 800. ஏனைய செலவு JP அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 16. பெரும்பணிகள் (த.தொ.கு. எண்.4515.00.800 JP. 1602)''

### 7. கிராமங்கள் தேர்வு

மாநிலத்திலுள்ள 12618 கிராம ஊராட்சிகளில் ஆண்டொன்றுக்கு சுமார் 2500 கிராம ஊராட்சிகளை தேர்வு செய்து அவை ஒவ்வொன்றுக்கும் சுமார் ரூபாய் 20 லட்சம் நிதியில் படிப்படியாக, 5 ஆண்டுகளில் அனைத்து ஊராட்சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராமங்களை இத்திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் சேர்த்துக்கொள்ள பரிசீலிக்கப்படும். குறைந்த தனிநபர் வருமானம் உள்ள கிராம ஊராட்சிகள் முதலில் பரிசீலிக்கப்பட்டு, வட்டார வாரியாக, ஊராட்சியின் வருமானத்திற்கேற்றவாறு, ஏறுமுகமாக, ஊராட்சிகளை வரிசைப்படுத்தி, முதல் ஆண்டில் குறைந்த தனிநபர் வருமானம் உள்ள 2500 கிராம ஊராட்சிகளை தேர்வு செய்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 8. வட்டார அளவில் கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யும் முறை

குறைந்த தனிநபர் வருமானம் உள்ள கிராம ஊராட்சிகள் முதலில் பரிசீலிக்கப்பட்டு, வட்டார வாரியாக, ஊராட்சியின் வருமானத்திற்கேற்றவாறு, ஏறுமுகமாக, ஊராட்சிகளை வரிசைப்படுத்தி, முதல் ஆண்டில் குறைந்த வருமானம் உள்ள 2500 கிராம ஊராட்சிகளை தேர்வு செய்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

வட்டாரத்தை ஒரு அலகாகக் கொண்டு, அனைத்து ஊராட்சிகளையும், அவைகளின் தனிநபர் வருமானத்தின் அடிப்படையில், ஏறுமுகமாக, வரிசைப்படுத்தி, முதலாமாண்டில் 6 முதல் 7 ஊராட்சிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படும் எனவும், இரண்டாவது வருடத்தில் அடுத்த 6 முதல் 7 ஊராட்சிகள் இத்திட்டத்தில் பங்கேற்க தகுதியுடையவையாகின்றன. இந்த முறையில் மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலுள்ள அனைத்து வட்டாரங்களிலும், பாகுபாடு ஏதுமின்றி ஒரே சீரான நிதிப் பங்கீடு மற்றும் திட்ட செயலாக்கம், இதன் மூலம் உறுதிப் படுத்தப்படுகின்றன. எனவே, வட்டாரத்தை ஒரு அலகாகக் கொண்டு, தனிநபர் வருமானத்தின் அடிப்படையில், கிராம ஊராட்சிகளை ஏறுமுகமாக வரிசைப்படுத்தி, அதன்படி ஒவ்வொரு வருடமும் சுமார் 2500 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்படும்.

**9. இந்த புதிய திட்டத்தில், கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்**

**i) வரையறுக்கப்படாத நிதி**

ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒதுக்கப்படும் ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சம் வரையறுக்கப்படாத தொகையாக இருக்கும். இதிலிருந்து கிராமத்தின் முக்கியத் தேவைகளை பிரதிபலிக்கும் பணிகளை மேற்கொள்ள இயலும். எஞ்சிய ரூ.15 இலட்சத்தில் கீழ்க்கண்ட பணிகளை ஊராட்சி மேற்கொள்ளும். மேலும் வரையறுக்கப்படாத ரூ.5 இலட்சம் நிதியினை தேவைக்கேற்ப கீழ்க்கண்ட பணிகளையும் நிறைவேற்ற பயன்படுத்தலாம்.

**ii) சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்**

தமிழ்நாடு முழுவதும் சுமார் 27,000 கி.மீ நீளமுள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது. இந்தப் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படலாம். மேற்படி சாலைகளை அமைக்க சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி, பொது நிதி மற்றும் மாநில நிதிக்குழு மான்யம் ஆகியவை போதுமானதாக இல்லை. ரூபாய் மூன்று இலட்சத்துக்கு மேற்படாமல் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்க வரையறை செய்யப்படுகிறது. சிமெண்ட் பாலங்கள் அமைப்பது, மற்ற பொருட்களை பயன்படுத்துவது போன்ற மாற்று தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்த ஊக்கப்படுத்தலாம்.

**iii) தெரு விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள்**

கட்டுமானங்கள் உள்ள மற்றும் கட்டுமானங்கள் இல்லாத பொது இடங்களில் தெருவிளக்குகள் அமைப்பது 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 110 (அ) மற்றும் 111(ஆ)–ன்படி கிராம ஊராட்சியின் கடமையாகும்.

**(அ) இதுவரை தெரு விளக்குகள் அமைக்கப்படாத இடங்களுக்கு தெரு விளக்கு வசதிகளை விரிவாக்குதல்**

இப்பணி தேவைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படலாம். இத்திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட குடியிருப்பு பகுதிகள் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதிகள் போன்ற விரிவாக்க பகுதிகள் மற்றும் புதியதாக ஏற்படுத்தப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்பு பகுதிகளுக்கு தேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து, தெருவிளக்குகள் விரிவுபடுத்தப்படலாம்.

**(ஆ). சோடியம் ஆவி விளக்குகள்**

கிராமங்களில் மக்கள் கூடும் பொதுவான முக்கிய இடங்களில் சோடியம் ஆவி விளக்குகள் வரையறைகளுக்குட்பட்டு அமைக்கப்படலாம்.

**IV. ஒரு கிராமத்திற்கு ஒரு குளம்**

கிராமங்களில் உள்ள குளம், குட்டைகளை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தலை ஊராட்சியின் கடமை என ஊராட்சிகளின் விதி 110 (ஜி)– வரையறை செய்கிறது.

அறுகிவரும் நீர் ஆதாரங்களால் நிலத்தடி நீரின் அளவு கணிசமாக குறைந்துள்ளது. கூடுதல் ஆழ்துளை குழாய் கிணறுகளின் மூலம் நீரினை உறிஞ்சுவதால் இப்பிரச்சனை மேலும் தீவிரமாகிறது. எனவே, உத்வேகத்துடன் மழை நீரை சேகரிப்பதின்மூலம் நிலத்தடி நீரின் அளவை உயர்த்துவது அவசியமாகிறது. இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நீரமைப்புகளின் கொள்ளளவை அதிகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஒரு கிராமத்திற்கு ஒரு குளம் என்ற இத்திட்டத்தின் கீழ் இயந்திரங்களைக் கொண்டு குளங்கள், குட்டைகள், கோவில் குளங்கள், மற்றும் ஊரணிகளில் அதிகபட்ச தரம் மற்றும் சரியான அளவுகளுடன் அகலப்படுத்துவது மற்றும் ஆழப்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொள்ளலாம். மேலும், தேவையான இடங்களில் கைப்பிடிச் சுவர், இறங்குபடிகள், மற்றும் வேலிகள் அமைப்பது போன்ற இதர அம்சங்களும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் சிறுபாசன குளங்களை மேம்படுத்தக் கூடாது. மேலும், தொலைநோக்கு பார்வையுடன், நீர் சேகரிப்பு திட்டப் பணிகள் முறையாக செய்யப்படவேண்டும். சுற்றுச்சூழல் மற்றும் நீர்வளம் மேம்படும்.

இந்த வகையிலான பணியை குறைந்தபட்சம் ரூ.3 இலட்சம் செலவிலும் தேவையின் அடிப்படையில் அதிகபட்சத் தொகையிலும் மேற்கொள்ளப்படவேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் ஒரு குளம் அமைக்க ரூ.3 இலட்சம் முதல் ரூ.5 இலட்சம் வரை ஒதுக்கீடு செய்யலாம்.

### V. உள்நாட்டு மீன்வளம்

உள்நாட்டு மீன்வளத்தை மேம்படுத்துவது உள் நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக அமைகிறது. இது நீர் நிலைகளை தூய்மைப் படுத்துவதை உறுதிப்படுத்துவதோடல்லாமல், ஊராட்சி வருவாயையும் அதிகப்படுத்துகிறது. மேலும், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு, நிலையான வருமானம் ஈட்டும் தொழிலாகவும் இது விளங்குகிறது. குறைந்த முதலீட்டுடன் மீன்வளத் துறை ஊரகப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் இதுபோன்ற மீன்வளத்தை பெருக்கி குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு உள்ளாட்சி நிறுவனங்கள் ஏலம் விட்டு வருவாயைப் பெருக்கும் உரிமையுடன் ஊரக உள்ளாட்சிகளிடம் ஒப்படைக்கலாம்.

இத்திட்டத்தில் ஒரு குளத்தை மேம்பாடு செய்ய சுமார் ரூ.25,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டுமென்று வரையறை செய்யப்படுகிறது.

### IV இடுகாடு மற்றும் சுடுகாடுகள்

இடுகாடு மற்றும் சுடுகாடுகள் அமைப்பது மற்றும் பராமரிப்பது, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், விதி 110 (எப்)–ன்படி ஊராட்சியின் கடமை ஆகும்.

இடுகாடு / சுடுகாடுகள் திறந்தவெளியாக உள்ளன இத்தகைய இடுகாடு / சுடுகாடு பகுதிகளில் அடிப்படை வசதிகளும் குறைவு. ஊரகப் பகுதிகளில் முறையாக வரையறுக்கப்பட்ட எல்லைகள் கொண்ட இடுகாடு / சுடுகாடு என்பது அடிப்படை தேவையாகும். பல கிராமங் களில் சரியான இடுகாடு / சுடுகாடு இல்லை. அப்படியே இருந்தாலும் அவை அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாமலேயே உள்ளன. ஆகவே இத்திட்டத்தின் கீழ் முறையான வரையறை செய்யப்பட்ட எல்லைகள், சுற்றுச்சூழல், காத்திருப்போர் அறை, விளக்கு வசதி, நீர் வசதி, போன்றவை செய்து தரப்படலாம். கைப்பம்புடன் கூடிய ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைக்கப்படலாம். நாளடைவில் நடைபாதை வசதிகளை ஏற்படுத்தலாம். மேலும், கிராம ஊராட்சிகள், இடுகாட்டின் உள்ளேயும், சுற்றுப்புறங்களிலும் மரக் கன்றுகளை நடுவதன் மூலம், தூய்மையான சுற்றுச் சூழல் உருவாகும்.

### VII. குடிநீர் வழங்கல்

1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், விதி 110 (ஜி)–ன்படி கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுப்பது கிராம ஊராட்சியின் கடமையாகும்.

தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் திட்டங்களில் பெருபான்மையானவை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறுவப்பட்டன. குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணிகள் ஊராட்சிகளின் பொறுப்பில் உள்ளன. மிகப்பழைய பம்புகள் மற்றும் குடிநீர் இணைப்புகளைக் கொண்டுள்ள இக்குடிநீர் திட்டங்களை பராமரிப்பது ஊராட்சிகளுக்கு மிகவும் கடினமாக உள்ளது. பழைய குடிநீர் இணைப்புகளில் உள்ள நீர்க்கசிவுகள் பல நோய்கள் பரவ காரணமாகிறது.

பழைய குடிநீர் திட்டங்களை புனரமைப்பது, தூர் வாருதல், அகழ்வு செய்தல், குடிநீர் குழாய் விஸ்தரித்தல், மின் பம்புகளை புதுப்பித்தல் போன்ற பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நெறிமுறைகளின் படி இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம். இத்துடன் தேவையான இடங்களில் கூடுதல் ஆதாரங்களையும் உருவாக்கலாம்.

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒரு பணிக்கு குறைந்தபட்சம் ரூ.1 இலட்சம் எனவும், தேவையின் அடிப்படையில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவும் வரையறை செய்யலாம்.

### VIII) விளையாட்டு

விளையாட்டுத்திடல், பூங்காக்கள், விளையாட்டுக் குழுக்கள் மற்றும் உடற்பயிற்சி மையங்கள் அமைப்பது மற்றும் பராமரிப்பது, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111 (எச்)–ன்படி, ஊராட்சியின் கடமையாகும்.

விளையாட்டு நடவடிக்கைகள் இளைஞர்களின் சக்தியை நெறிப்படுத்தி, சமூக பொருளாதார பிரச்சனைகளைக் குறைப்பதற்கும், ஊரக இளைஞர்களிடையே விளையாட்டு திறமையை உருவாக்குவதற்கும் பயன்படும். தேவையின் அடிப்படையில், மக்கள் கூடும் பொதுவான இடங்களிலும் பள்ளிகளிலும், விளையாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள கடந்த 2000ம் ஆண்டு தொடங்கப்பட்ட "விளையாட்டு மற்றும் மனமகிழ்வு மன்றங்களை" புதுப்பிக்கலாம்.

கிராம இளைஞர்களுக்கான விளையாட்டு வசதிகள் செய்து கொடுக்க ஒரு கிராமத்திற்கு ரூ.50,000 என வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது. அல்லது அந்த கிராமத்தில் உள்ள பள்ளியில் விளையாட்டு மையம் அமைக்க ரூ.1. 50 இலட்சம் செலவு செய்யலாம்.

### IX) படிப்பகம்

1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111 (ஜி மற்றும் (ஐ)ன்படி, படிப்பகம் எழுத்தறிவு மையங்கள் அமைத்தல், மற்றும் பராமரித்தல் ஊராட்சியின் கடமையாகும்.

ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு சமுதாயக் கூடம் உள்ளது. அவை பெரும்பாலும் பயன்படுத்தப்படாமலேயே உள்ளன. இந்த சமுதாய கூடங்கள் அல்லது அதில் ஒரு பகுதியை படிப்பகங்களாக பயன்படுத்தலாம்; சமுதாயக் கூடங்கள் கிடைக்கப் பெறவில்லையெனில் அக் கிராமத்தில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக் கட்டிடம் அல்லது ஒரு பொது கட்டிடம் படிப்பகமாக மாற்றியமைக்கப்படலாம். கிராமப் புறங்களில், செய்தித்தாள்கள், வார இதழ்கள் போன்ற பத்திரிக்கை படிக்கும் பழக்கத்தினை உருவாக்கிட தமிழ் ,ஆங்கில செய்தித்தாள்கள் மற்றும் வார இதழ்களுக்கு கிராம ஊராட்சிகள் சந்தா செலுத்தி மகளிர் சுயஉதவிக் குழுக் கட்டிடங்கள் அல்லது இதர பொதுவான மக்கள் கூடும் இடங்கள் ஆகியவற்றில் கிடைக்குமாறு நடவடிக்கை எடுக்கலாம். கேரம் போர்டு, சதுரங்கம், போன்ற உள்ளரங்க விளையாட்டுக்களை மேலும் ஊக்கப்படுத்தலாம்.

படிப்பகங்களாக பயன்படுத்தத்தக்க சமுதாய கூடங்கள், இதர பொதுக் கட்டிடங்களை, சிறிய அளவில் பழுது நீக்கி பயன்படுத்தலாம். புத்தகம், மேஜை, நாற்காலி , அலமாரி போன்ற மரச்சாமான்கள் நன் கொடை வடிவில் வேண்டி பெறலாம். இவ்வாறு நிறுவப்படும் ஒவ்வொரு படிப்பகத்திற்கும் செலவு செய்ய ரூபாய் 1. 00 இலட்சம் உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்படுகிறது.

### X) கிராம அங்காடிகள் / சந்தைகள்

1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111(சி), ஊராட்சி ஒன்றிய அங்காடிகள்/சந்தைகள் தவிர கிராம சந்தைகளை பராமரிக்கும் பொறுப்பு கிராம ஊராட்சியைச் சேர்ந்தது என குறிப்பிடுகிறது.

பொது மக்களும், கால்நடைகளும், வழக்கமாக கூடும் கிராம அங்காடி மற்றும் சந்தைககள் நல்ல நிலையில் இல்லை. அவ்விடங்களில் சரியான சுகாதார மற்றும் குடிநீர் வசதிகள் இல்லை. சரியான தரைதளம் இல்லாமலும், வியாபாரிகள் நிழலிடம் இல்லாமலும் நாள் முழுவதும் வெயிலில் அமரும் நிலை உள்ளது. இப் புதிய திட்டத்தின் கீழ் கிராம அங்காடிகளும், சந்தைகளும் புதுப்பிக்கப்படலாம். தரைதளமும், ஓடு வேய்ந்த மேற்கூரையும் அமைக்கலாம். பொது மக்களுக்கும், கால்நடைகளுக்கும் தேவையான குடிநீர் வசதிகளும் செய்து தரலாம். பொது கழிப்பிடங்கள்/ கழிப்பறைகளும் தேவையின் அடிப்படையில் அமைக்கப்படும்.

### XI) தகவல், கல்வி மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் (IEC)

இத்திட்டத்திற்கு, ஒவ்வொரு ஆண்டிலும் ஒதுக்கப்படும் நிதியாகிய ரூ.500 கோடியில், ஒரு விழுக்காடு ஆகிய ரூ.5 கோடி நிதி தகவல், கல்வி மற்றும் கலாச்சார நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படுகிறது. இந்த திட்டத்தைப் பற்றியும், கல்வி , சுகாதாரம், துப்புரவு மற்றும் சமூகம் சார்ந்த நடவடிக்கைகள் பற்றியும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு இந்த நிதியினை பயன்படுத்தலாம். இந்த நிதியினை ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பிரித்தளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்

### 10. பிற திட்டங்களுடன் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துதல்

ஒவ்வொரு ஊராட்சிக்குமான ரூபாய் 20 லட்சத்துடன் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டம், புதுவாழ்வுத் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் நிதியினையும் ஒருங்கிணைத்து தேர்வு செய்யப்படும் கிராமங்களின் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் சிறப்பு கவனத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் மிகவும் குறைந்த தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் கிராமங்கள் செயலாக்கத்திற்கு தேர்வு செய்யப்படுகின்றன. இந்த கிராமங்களில் செயல்படுத்தப்படுகின்ற பணிகள் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திற்கு உட்பட்டவையாகும். மீதம் உள்ள பணிகளை தேர்வு செய்வதற்கும், செயற்படுத்துவதற்கும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் இத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி அல்லது தொடர்புடைய துறைகளுக்கு செயலாக்கத்திற்கு ஒப்படைக்க வேண்டும். இத்திட்டங்களை செயல்படுத்திய பிறகு கிராமங்களில் விடுபட்டுள்ள அடிப்படை வசதிகள் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் (RIDF)கீழ் நிதி பெற்று நிறைவேற்றப்படும்.

11. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் பயனடைய உள்ள கிராமங்களின் பட்டியல் ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரால் பின்னர் வெளியிடப்படும். மேலும் இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களின் செயற்பாட்டிற்கு உரிய நெறிமுறைகள் திட்ட வாரியாக தனியாக வெளியிடப்படும்.

12. இத்திட்டத்திற்கென அரசால் அனுமதிக்கப்படும் தொகையைப் பெற்று உரிய கிராம ஊராட்சிகளுக்கு பிரித்து வழங்கிட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

13. இத்திட்டத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் மதிப்பீட்டுக்கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

14. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் . 54117/ஊவ/2006, நாள் 8.9.2006–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது .

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்